செ.வெ.எண். 42 நாள்.18.12.2017.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 6 பயனாளிகளுக்கு ரூ.4.65 இலட்சத்திற்கான காசோலைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்திர உதவித் தொகை வழங்குவதற்கான உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.12.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 4 பயனாளிகளுக்கு தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலைகளையும், ஒரு பயனாளிக்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும், ஒரு பயனாளிக்கு ரூ.15 ஆயிரத்திற்கான காசோலையினையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினை வழங்கினார். மேலும், ராஞ்சியில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகள மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் ப்ளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு 3 தங்க பதக்கம் மற்றும் 3 வெள்ளி பதக்கங்களை பெற்ற மாணவ, மாணவியர்கள், ராஞ்சியில் காது கேளாதோருக்கான தேசிய அளவிலான தடகள போட்டிகளில் உயரம் தாண்டுதலில் புதிய சாதனை படைத்த வடக்கன்குளம் பாலகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வரும் மாணவி சமிஷா பர்வீன் மற்றும் தமிழக அளவில் ஒசூரில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் முதல் இடத்தை பெற்ற 12ம் வகுப்பு மாணவன் டி.பாபு ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், ப்ளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளி பள்ளி தாளாளர் திரு.அருள் சாமுல் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.